**மாகாணக் கல்வித் திணைக்களம்**
**வடக்குமாகாணம்**
**மூன்றாம் தவணைப் பரீட்சை – 2018**

| தரம் - 11 | **இஸ்லாம்** | நேரம்: 3 மணித்தியாலம் |
|---|---|---|

சுட்டெண்.....................................

**பகுதி - I**

**கவனிக்க**

- எல்லா வினாக்களுக்கும் விடை தருக.
- 1 தொடக்கம் 40 வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றிலும் 1, 2, 3, 4 என இலக்கமிடப்பட்ட விடைகளில் சரியான அல்லது மிகப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.
- அவ் விடைத்தாளின் மறுபக்கத்தில் தரப்பட்டுள்ள மற்றைய அறிவுறுத்தல்களையும் கவனமாக வாசித்து அவற்றைப் பின்பற்றுக.

**மிகப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.**

01. இஸ்லாமிய அடிப்படைக் கொள்கைக் கோட்பாட்டைக் குறிக்கும் பதம்
    1. இல்முல்அகீதா 2. இல்முல்பிக்ஹ் 3. இல்முல்ஹதீஸ் 4. உலூமுல்குர்ஆன்

02. பிர்அவ்னின் காலத்தில் வாழ்ந்த நபியின் பெயர்
    1. நூஹ் (அலை) 2. மூஸா (அலை) 3. இப்ராஹீம் (அலை) 4. ஈஸா (அலை)

03. "இமாமுல் மதீனா" எனும் சிறப்புப் பெயர், பெயர் பெற்ற இமாம்
    1. இமாம் அபூஹனிபா 2. இமாம் மாலிக்
    3. இமாம் ஷாபிஈ 4. இமாம் அஹ்மத் இப்னு ஹன்பல்

04. அரபு மொழியை தேசிய மொழியாக பிரகடனம் செய்த கலீபா
    1. முஆவியா (றழி) 2. உமர் (றழி)
    3. அலி (றழி) 4.அப்துல் மலிக் பின் மர்வான்

05. "துன்னூரைன்" எனும் சிறப்புப் பெயர் கொண்டு அழைக்கப்பட்ட கலீபா
    1. உமர் (ரழி) 2. உஸ்மான் (ரழி) 3. அலி (ரழி) 4. அபூபக்கர் (ரழி)

06. இலங்கை முஸ்லிம்களால் அறிமுகப்படுத்தப்பட்ட வைத்திய முறை
    1. மாந்திரீக மருத்துவம் 2. யூனானி மருத்துவம்
    3. ஆயுள் வேதம் 4. ஆங்கில மருத்துவம்

07. "திவானுல் பரீத்" என்ற தபால் திணைக்களத்தை உருவாக்கியவர்
    1. அபூபக்ர் (றழி) 2. முஹம்மது நபி (ஸல்)
    3. உமர் (றழி) 4. வலீத் இப்னு அம்ர் (றழி)



kalvi.lk

08. திருமண ஒப்பந்தத்தில் "கபூல்" என்பதன் கருத்து
1. ஒப்படைத்தல்
2. ஏற்றுக் கொள்ளல்
3. மஹரைப் பெறுதல்
4. சாட்சியமளித்தல்

09. இஸ்லாமிய நிதியியல் கோட்பாடுகளுள் "ஸலம்" என்பது
1. விவசாயக் கடன்
2. உற்பத்திக் கடன்
3. வாடகைக் கொள்வனவு
4. அடகு

10. இஸ்லாம் பலதார மணத்தை
1. கட்டாயமாக்கியுள்ளது
2. தடுத்துள்ளது
3. தேவையின் அடிப்படையில் அனுமதித்துள்ளது
4. பொருத்தமற்ற செயலாகக் கருதுகின்றது

11. உயிரைக் கைப்பற்றும் மலக்கு
1. ஜிப்ரீல்(அலை) 2. மீக்காயீல்(அலை) 3. இஸ்ராபீல்(அலை) 4. இஸ்ராயீல் (அலை)

12. "ஷவ்வால் தலைப்பிறையில் நோன்பு நோற்பது
1. ஹலால்
2. ஹராம்
3. ஸுன்னத்
4. முபாஹ்

13. ஸஹாத் பெறத் தகுதியான கூட்டத்தாரில் "அர்ரிகாப்" எனப்படுவோர்
1. உரிமைச்சீட்டு எழுதப்பட்ட அடிமைகள்
2. ஸகாத் வசூலிப்போர்
3. புதிதாக இஸ்லாத்தை ஏற்றவர்கள்
4. வழிப்போக்கர்கள்

14. ஹஜ்ஜிற்கும் - உம்ஹாவிற்கும் இடையிலான பிரதான வேறுபாடு
1. த வாப் செய்தல்
2. மினாவில் கல்லெறிதல்
3. அரபாவில் தரித்தல்
3. ஸபா-மர்வாவுக்கிடையில்தொங்கோட்டம்ஓடுதல்

15. இஸ்லாமிய கிலாபத் வீழ்ச்சியடைந்த ஆண்டு
1. 1920
2. 1815
3. 1924
4. 1928

16. இஸ்லாத்தில் இரண்டாவது ஆன்மீக அந்தஸ்த்தைப் பெறும் இறை இல்லம் எது?
1. மஸ்ஜிதுல் அக்ஸா 2. மஸ்ஜிதுன் நபவி 3. கஃபத்துல்லா 4. இஸ்ரேல்

17. அல்குர்ஆனில் 18 நபிமார்களின் பெயர்களை உள்ளடக்கிய சூறா
1. சூறா புர்க்கான்
2. சூறா லுக்மான்
3. சூறா அன்ஆம்
4. சூறா பகரா

18. "பொருந்திக் கொள்ளல்" என்பதன் அரபுப்பதம்
1. அஸ் - ஸப்ர்
2. அர் - ரிழா
3. அத் - தவக்குல்
4. அல் - மஃரிபா

19. "கருங்கற் பாறையிலிருந்து ஒட்டகம் வெளியாகியமை" எனும் அற்புதம் வழங்கப்பட்ட நபி
1. இப்ராஹீம் (அலை) 2. மூஸா (அலை) 3. ஸாலிஹ் (அலை) 4. ஈஸா (அலை)

20. இமாம் புஹாரி (ரஹ்) அவர்கள் பிறந்த ஆண்டு
1. ஹிஜ்ரி 194
2. ஹிஜ்ரி 204
3. ஹிஜ்ரி 209
4. ஹிஜ்ரி 215

21. தற்போதைய ஹிஜ்ரி ஆண்டு
1. 1436
2. 1437
3. 1438
4. 1440



kalvi.lk

22. "மல்யுத்தத்தில் வெற்றி பெறுபவன் உண்மையான வீரனல்லன். கோபத்தின் போது தன்னை அடக்கிக் கொள்பவனே உண்மையான வீரனாவான்." இது
   1. அல்குர் ஆனின் கூற்று
   3. அல் ஹதீஸின் கூற்று
   3. ஸஹாபியின் கூற்று
   4. இமாம் அபூஹனீபாவின் கூற்று

23. "பிக்ஹுத் துறையின் பொற்காலம்" என போற்றப்படுவது
   1. முஹம்மது நபி (ஸல்) அவர்களின் காலம்
   2. தபஉத்தாபியீன்கள் காலம்
   3. ஸஹாபாக்களின் காலம்
   4. தாபியீன்களின் காலம்

24. ஆண்களுள் முதன்முதலில் இஸ்லாத்தை ஏற்றுக்கொண்டவர் யார்?
   1. அபூபக்ர் (ரழி) 2. உமர் (ரழி) 3. உஸ்மான் (ரழி) 4. அலி (ரழி)

25. "ஸாஹிபுல் அஹ்தாத்" என அழைக்கப்பட்டவர்
   1. ஆளுநர் 2. பொலிஸ் அதிகாரி 3. இராணுவ காரியதரிசி 4. திறைசேரி செயலாளர்

26. அபூலு..லுஆ எனும் பாரசீக மஜூஸியின் தாக்குதலால் வபாத்தான ஸஹாபி
   1. அலி (றழி) 2. அபூபக்ர் (றழி) 3. உஸ்மான் (றழி) 4. உமர் (றழி)

27. மக்கா வெற்றி கொள்ளப்பட்டது
   1. ஹிஜ்ரி 5 2. ஹிஜ்ரி 6 3. ஹிஜ்ரி 7 4. ஹிஜ்ரி 8

28. கி.பி 628 இல் நபி (ஸல்) அவர்களால் இலங்கைக்கு அனுப்பி வைக்கப்பட்ட ஸஹாபி
   1. அப்துல்லாஹ் இப்னு உமர்
   2. அம்ரிப்னுல் ஆஸ்
   3. வஹப் இப்னு அபீ ஹப்ஸா
   4. முஆத் இப்னு ஜபல்

29. ஹுதைபிய்யா உடன்படிக்கை இடம் பெற்ற வருடம்
   1. ஹிஜ்ரி 4 2. ஹிஜ்ரி 6 3. ஹிஜ்ரி 8 4. ஹிஜ்ரி 10

30. தாருல் பனா என்பது
   1. மறுமை வாழ்க்கை
   2. கப்ர் வாழ்க்கை
   3. சுவர்க்க வாழ்க்கை
   4. உலக வாழ்க்கை

31. அல்குர்ஆனை தொகுக்கும் பணிக்கு தலைமை தாங்கிய ஸகாபி யார்?
   1. ஸைத் (ரழி) 2. அபூபக்ர் (ரழி) 3. அலி (ரழி) 4. உமர் (ரழி)

32. இலங்கை ஹாஜிகளுக்கான மீக்காத் எல்லை
   1. யமன் 2. யலம்லம் 3. கொழும்பு 4. பக்தாத்

33. இலங்கை முஸ்லிம்களில் அதிகமானோர் பின்பற்றும் மத்ஹப்
   1. மாலிகி மத்ஹப் 2. ஹன்பலி மத்ஹப் 3.ஷாபி மத்ஹப் 4. ஹனபி மத்ஹப்

**'அ' பகுதியில் உள்ள தகவல்களை 'ஆ' பகுதியில் உள்ள தகவல்களோடு இணைத்தால் வரும் பொருத்தமான சேர்மானத் தொகுதியை தெரிவு செய்க.**

| | |
|---|---|
| 1. அபூபக்கர் (றழி) | A. ஸைபுல்லாஹ் |
| 2. உமர் (றழி) | B. அஸதுல்லாஹ் |
| 3. உஸ்மான் (றழி) | C. ஸித்தீக் |
| 4. அலி (றழி) | D. துன்னூரைன் |

1. ABDC 2. BCAD 3. DCAB 4. CBDA



kalvi.lk

35. 1. ஸலாத் — A. பொறுமை
2. புதூஹுல்புல்தான் — B. அஜாஇபுல் ஹிந்து
3. ஸப்ர் — C. தொழுகை
4. இப்னு ஷஹ்ராயார் — D. அல் பலாதூரி

1. DBAC 2. CDAB 3. CBAD 4. ACBD

36. முஹம்மது காஸிம் சித்திலெப்பை பிறந்த ஆண்டு
1. 1822 2. 1864 3. 1838 4. 1867

37. ”என்னைப் பொறுத்தவரை அரசியல் சுதந்திரத்தைவிட வேறெந்த உரிமையையும் பெரிதான உரிமையென நான் கருதவில்லை... ” எனக் கூறியவர்
1. M.C.சித்திலெப்பை 2. முஹம்மது லெப்பை
3. ரி.பி.ஜாயா 4. செய்யத் அஹ்மத்

38. பின்வருவனவற்றில் அறிஞர் M.C.சித்திலெப்பையால் எழுதப்பட்ட முதலாவது நாவல்
1. அஸன்பே சரித்திரம் 2. முஸ்லிம் பாதுகாவலன்
3. இலங்கையில் இஸ்லாம் 4. அஸ் - ஸவாப்

39. அல்லாஹ் அனுமதித்தவற்றுள் அவனுக்கு மிகவும் வெறுப்பானது
1. பலதார மணம் 2. தலாக் 3. யாசகம் கேட்டல் 4. வட்டித் தொழில்

40. அல்குர்ஆன் குறிப்பிடும் சிசு உருவாக்கம் பற்றிய கருத்தை ஆய்வு மூலம் உறுதிப்படுத்தியவர்
1. பேராசிரியர் கீத்மோர் 2. ஸேர் ஜேம்ஸ் ஜீன்ஸ்
3. ஸேர் ஐன்ஸ்டீன் 4. மொரிஸ் புகைல்

(40 x 1 = 40 புள்ளிகள்)

agaram.lk



kalvi.lk

மாகாணக் கல்வித் திணைக்களம்

வடக்குமாகாணம்

மூன்றாம் தவணைப் பரீட்சை– 2018

# இஸ்லாம்

## தரம் : 11

### பகுதி – II

**கவனிக்க**

- முதலாம் வினா **உட்பட** ஏனையவற்றுள் நான்கு வினாக்களைத் தெரிவு செய்து மொத்தமாக **ஐந்து** வினாக்களுக்கு விடை தருக.

**1)** 01. "நான் உயிருடன் இருந்து இஸ்லாம் மடிவதை விட இஸ்லாம் உயிருடன் இருந்து நான் மடிவது சிறந்தது" எனக் கூறியவர் யார்?

02. நபிமார்களின் வாஜிபான பண்புகளில் இரண்டைத் தருக.

03. தொடக்கை ஏற்படுத்தும் விடயங்கள் இரண்டைத் தருக.

04. "ஜபீரத்" என்றால் என்ன?

05. உடலோடு தொடர்பான இபாதத்துக்கள் இரண்டைக் குறிப்பிடுக.

06. ஆன்மீக மேம்பாட்டுக்கான வழிகள் 4 ஐத் தருக.

07. துணை மூலாதாரங்களில் இரண்டைத் தருக.

08. உடல் ஆரோக்கியத்தைப் பேண கையாள வேண்டிய வழிமுறைகள் இரண்டைத் தருக.

09. தாயின் வயிற்றில் இருக்கும் பிள்ளைக்கு மலக்குகள் மூலம் தீர்மானிக்கப்படும் விடயங்கள் எவை?

10. நிஸாப் என்றால் என்ன?

(10X2=20புள்ளிகள்)

**2)** 01. திருமணம் செய்வதற்கான காரணங்கள் / நோக்கங்கள் மூன்றைக் குறிப்பிடுக.

02. இஸ்லாத்தில் அனுமதிக்கபட்ட வியாபார முறைகள் நான்கைத் தருக.

03. பேரழிவை ஏற்படுத்தும் ஏழு பெரும் பாவங்களில் ஐந்தைக் குறிப்பிடுக.

(3+2+5=10புள்ளிகள்)



kalvi.lk

**3)** 01. ழிஹார் என்றால் என்ன?

02. கணவன் மனைவிக்குச் செய்ய வேண்டிய கடமைகள் மூன்றைத் தருக.

03. கூட்டு வியாபாரத்தின் நன்மைகள் மூன்றைக் குறிப்பிடுக.

04. டீ. பி. ஜாயாவின் சமூகத்துக்கான பணிகள் மூன்றைத் தருக.

(1+3+3+3=10புள்ளிகள்)

**4)** 01. வரலாற்றில் தோன்றிய போலி நபிமார்கள் மூவரைத் தருக.

02. இறுதி நபித்துவத்தை குறிக்கும் அறபுப்பதம் யாது?

03. ஏனைய நபிமார்களை விட நபி (ஸல்) அவர்களுக்கு கொடுக்கப்பட்ட சிறப்பான ஆறு விடயங்கள் எவை?

(1+3+6=10புள்ளிகள்)

**5)** 01. ஸகாத்தின் பர்ளுகள் எவை?

02. நோன்பாளிக்கு உள்ள இரண்டு சந்தோசங்கள் எவை?

03. ஹஜ்ஜின் அர்கான்கள் 6 உம் எவை?

(2+2+6=10புள்ளிகள்)

**6)** 01. இஸ்லாத்தில் மிகவும் முக்கியத்துவம் பெறும் புனிதஸ்தலங்கள் மூன்றையும் தருக.

02. பின்வரும் இரண்டு பதங்களின் பொருளையும் தருக.

a. ஹல்க்

b. ஹுலுக்

03. பின்வரும் நபிமார்களின் அற்புதத்தை கூறுக.

1. இப்றாஹீம் (அலை)
2. மூஸா (அலை)
3. ஸாலிஹ் (அலை)
4. ஈஸா (அலை)
5. நபி (ஸல்)

(3+2+5=10புள்ளிகள்)

**7)** 01. அல்குலபாஉர் ராஸிதூன்கள் என்றால் யார்?

02. இலங்கை உம்மத் என்ற வகையில் நாம் கடைப்பிடிக்க வேண்டிய விடயங்கள் நான்கைக் குறிப்பிடுக.

03. இஸ்லாமிய தொடர்பூடகங்கள் பெற்றிருக்க வேண்டிய ஒழுக்கவியல் விதிகள் நான்கைத் தருக?

(2+4+4=10புள்ளிகள்)



kalvi.lk

Education
கல்வி
agaram.lk
අධ්‍යාපන



kalvi.lk